
# விபவி

## செய்தி மடல்

ஒக்டோபர், நிரல்-22




வருங்கள் இரத்தத்தில் குளிப்போம் - 02

சுவைஞர்கள் கலந்துரையாடல் - 03

24 மணிநேர....... - 04

பரிமாற்றம் - 05

சித்திரக் கைலஞர்கள் - 10,11

கவிதை - 08,12

வாசிப்பு - 13

ஆயிரம் நாரைகள் - 16



விபவி கலாசார மையம்

81/4, பாகொடை வீதி நுகேகொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாருங்கள்! இரத்தத்தில் குளிப்போம்!!

-வைபரி-

எங்கள் பாதைக்கு இரத்தம். நண்பனை எதிரியாய் நினைத்து வெட்டுவதால் ஊறும் இரத்தம் சம்பளமாகும். துவக்கு, பொல்லு, கத்தி எங்கள் கைக்குள் உட்கார்ந்து கொள்ளும். மண்துகள்கள் எல்லாம் கண்ணிவெடியால் பின்னப்படும். கட்டிடங்கள் மரங்கள் எல்லாம் மீண்டும், 'சீலிங்' உட்பட எல்லா இடமும் வெடிமருந்து பொருத்தப்படும். ஒற்றர்படை ஒவ்வோர் மதில் ஓரமும் சுவருக்குள்ளும் படுத்திருக்கும். கணவன் மனைவி முத்தமிடும் போதும், எழும்பும் சத்தத்திலும் எதிர் கருத்து உள்ளதா என தேடுவோம். குழந்தை அழும் போதும், சேடம்விடும் வயோதிபரும் எங்கள் பரீட்சைக்கு உள்ளாகமல் தப்பமுடியாது. வருடம் வரும் புது விதமாக துப்பக்கிகள் பளிச்சுடும். துப்பாக்கியின் வேகத்துக்கு ஏற்றாவாறு சட்டங்கள்!!! எடுகோள்கள்!!! தேடப்படும் நீண்ட தூர பீரங்கிகளும் தீட்டப்படும்.

ஒரு கையசைப்பில் உடல்கள் மண்ணில் புதையும். உடல்கள் தெரியப்படும் சிலது வீரர்களாயும் மற்றையது துரோகிகளாயும் சித்திரம் தீட்டுவோம். மூச்சுக்குழலுக்குள் துப்பாக்கி செருகப்படும். தும்மும் போதும் சன்னம் தான் பாயும். கதைப்பவர்களின் குரல்களை கண்ணிவெடியால் நிரம்பும். எங்கள் பரப்பில் எவரையும் நம்பமுடியாது. ஒரு மனிதன் இருக்கும் வரையும் மனிதம் இருக்கவே கூடாது. எதிரிகள் உயிருடன் பிடிபட்டால் 'மீன்' துண்டாக நறுக்குவோம். வீதி ஓரங்களில் மஞ்சள் நிற சமிச்சை தெரிந்தால் அது சிவப்பாகத்தான் இருக்கும் பச்சையாகவே கூடாது. நாங்கள் சொல்லுவது தான்சரி. நாங்கள் தான் வரலாறு. ஒரு மனித உயிர் இருக்கும் வரை எங்கள் குறிக்கோள் மரணிக்காது. ஆனாலும் மரணம் திகழும்.

வாருங்கள் அலை அலையாய் இரத்தத்தில் குளிப்போம்
நாளை இரத்தத்தில் மூழ்குவோம்.
இரத்தமே எங்கள் கலாசாரம்.
இரத்த கலாசாரத்தாலேயே நாங்கள் அங்கிகரிக்கப்பட்டோம்.
ஐயோ!! இரத்தம் உள்ளதா இல்லை எனில் கைகளை கீறுங்கள்
முகங்களை துளையுங்கள் சரீரத்தை குத்துங்கள்.
உங்களிடம் இல்லை எனில் அருகே உள்ளவரை குத்தி துளைத்து
வெட்டி ஐயோ! இரத்தம் வேண்டும் இரத்தம்.

நேற்று இறந்த கிருஷந்தியடம் கேளுங்கள். இன்று இறந்த மேயர் சிவபாலனையும் ஏன் அந்த எல்லோரையும் கேளுங்கள்!! இத்தத்தின் தேவையை **A, B, AB, O** பகுப்பாய்வு செய்து கூறுவார்கள். இரத்தம் அலைலையாய் பாயட்டும். இரத்தமழை, இரத்தக்காற்று, இரத்தமண், இரத்தக்கண்ணீர், இரத்தமுத்தம் எல்லாம் இரத்தமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைஞர்கள் கலந்துரையாடல்.

**1998** இலக்கிய மாதத்தை கொண்டாடும் முகமாக 'சுவைஞர் கலந்துரையாடல்' என்றொரு நிகழ்ச்சியை இலங்கை எழுத்தாளர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது இந்த சுவைஞர் கலந்துரையாடல் 1998 செப்டெம்பர் 12ம் திகதி சனிக்கிழமை காலை 10.00மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை இராஜகிரிய நாவலை 505 இலக்கத்திலுள்ள TVT தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தச் சுவைஞர்கள் கலந்துரையாடல் நிகழ்சியில் இருநூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் வாசகர்கள், விமர்சகர்கள் கலந்துகொண்டது இந்த நிகழ்சி முழுநாளும் கலகலப்புள்ளதாகவும் அர்த்த புஷ்டியுள்ளதாவும் நடைபெற்றது. நீண்டநாட்களின் பின் பெரும் தொகையான எழுத்தாளர்களும் விமர்சகர்களும் வாசகர்களும் ஒரே இடத்தில் சந்திக்க வாய்ப்புக்கிடைத்தனை ஒரு அரிய சந்தர்ப்பமாக இருந்தது. மேலும் கலந்துரையாடலில், 1975ம் ஆண்டிற்குப் பின்னர் முதல் முதலாக பெரும் தொகையான சிங்கள எழுத்தாளர்களும் தமிழ் எழுத்தாளர்களும் ஒரே இடத்தில் ஒன்று கூடி மனம் விட்டுப்பேசி ஒருமித்து உணவருந்தி, சிங்கள தமிழ் இலக்கியம் பற்றி கருத்துப் பரிமாறிக் கொண்டமை ஒரு சிறப்பு வாய்ந்த அம்சமாக இரந்தது. இனப் பிரச்சினை சம்பந்தமாகவும், யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை எந்த அளவிற்கு சிங்கள படைப்பாளிகள் தங்களுடைய ஆக்கங்களில் பிரதிபலித்துள்ளார்கள் இப் பிரச்சினைகளை எல்லாறு அணுகியுள்ளார்கள் என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. இக் கேள்விகளுக்கு சில பிரவல சிங்கள எழுத்தாளர்களால் தங்களது எந்தெந்த படைப்புக்களில் எவ்வாறு இப் பிரச்சினைகளை சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், பாடல்கள் ஆகியவற்றில் முன்னிலைப்படுத்தியுள்ளோம் என்பதை விளக்கிப் பதிலளித்தார்கள். இலங்கையின் பிரபல எழுத்தாளர்களிடம் அவர்களுடைய ஆக்கங்கள் பற்றி சுவைஞர்களாலும் இளம் எழுத்தாளர்களாலும் விமர்சன ரீதியான கேள்விகணைகள் தொடுக்கப்பட்டன. இக் கேள்விக்கணைகளுக்கு தேர்ச்சிபெற்ற எழுத்தாளர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் விரிவாகவும் பதிலளித்தார்கள். இடைக்கிடையே கவிஞர்களால் கவிகள் படிக்கப்பட்டதுடன் பக்கவாத்தியங்களுடன் மெல்லிசைப்பாடல்கள்களும் பாடப்பட்டன. அண்மையில் வெளியிடப்பட்ட நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் பற்றி இளம் வாசகர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்னள். எழுத்தாளர்களிடம் சிறந்த வினாக்களைக் கேட்ட பல சுவைஞர்களுக்கு நூல்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன.

இப்படிப்பட்ட ஒன்றுகூடல்களை ஆண்டு தோறும் நடாத்தப்பட வேண்டுமென்று இலங்கை எழுத்தாள் அமைப்பினரை அநேக எழுத்தாளர்களும் சுவைஞர்களும் கேட்டுக்கொண்டனர். இத்தகைய ஒன்றுகூடல்கள் சிங்கள தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களை ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கும் பல்லினங்களைச் சார்ந்த எழுத்தாளர்கள் மத்தியிலுள்ள இடைபெளியைக் அகற்றுவதற்கு உதவுமென்று எழுத்தாளர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

– ஜெனமோகனா –

24 மணிநேர வானொலிச் சேவை. 'சேவை' என்பதின் அர்த்தம் புரிபட வேண்டும்? 24 மணி நேரமும் சினிமாப் பாடல்கள். பாடல்களோ 'சுற்றிச் சுற்றி சுப்பற்ற ........' விட்டாப் போதாதென்று தொலைபேசியில் நேயர்களதும் அறிவிப்பாளர்களதும் உரையாடல்? இதுவும் போதாதென்று அறிவிப்பாளர்களின் அறிவார்ந்த கேள்விகள்.(முதலாம் வகுப்பில் அவனது நண்பன் அவனை 'குரங்கு' என்று சொன்னானாம். அவன் பத்தாம் வகுப்பில் தானாம் தனது நண்பனை அப்படிச் சொன்னதற்காக அடித்தானாம். ஏன்? விடையைத் தெரிவிக்கிறார்கள். பத்தாம் வகுப்பிற்கு வந்தாப் பிறகு தானாம் அவனுக்கு குரங்கு என்றால் என்ன என்பதை அறிந்தானாம்.) எங்கபோய் முட்ட?


இது குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நேயர்களுக்கு ஆறுதலாக இருக்கலாம். ஆனால் 24 மணிநேர ஒலிபரப்பானது மனதை ஒருவகை 'கோமா' நிலைக்குத் தான் தள்ளி வைக்கிறது. ஒவ்வொருவரினதும் வீட்டுக் கதவையும் தட்டிக்கொள்ளாமலே நுழைந்துவிடுகிறது.

ஒலிபரப்பில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, இதனால் ஏற்படும் தாக்கம் தெரியாமலில்லை. ஆனால் அவர்களுக்கு பணமும் புகழும் குறியாக இருப்பதால் இதெல்லாம் கால் தூசு. பற்றிரியாக்கள் போன்று இவை மக்களை, அவர்களின் சிந்தனையில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் உடனடியாக காண முடியாவிட்டாலும் சிறிது காலத்தின் பின் படிப்படியாக விகிதம் எமக்கு உணர்த்தும். அப்போது நாம் மீண்டுவிடாதபடி கடந்திருப்போம்.?

இவை ஒருபுறமிருக்க, இ. ஒ. கூ. தாபனத்தின் சேவை. இதில் வர்த்தக சேவை, மற்ற 24 மணிநேர ஒலிபரப்பு சேவைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறது. தொலைபேசி உரையாடலையும் அது ஏற்படுத்தியிருக்கிறது?(எல்லாம் நன்மைக்கே) தேசிய சேவையில் பல நிகழ்சிகள் குறைபாடக இருந்தாலும் சில நல்ல நிகழ்சிகள் ஒலிபரப்பாகிறது. வாரம் ஒரு வலம், கலைப் பூங்கா, இதய சங்கமம், கவிதைக் கலசம், தகவல் மஞ்சரி, பேட்டிகள், கலைஇலக்கிய நிகழ்சித் தொகுப்புக்கள் (பத்திரிகைகள் தொகுப்பதாகக் கூறிக்கொண்டு, தொகுப்பாளர் தனது கருத்தை திணித்துவிடுவார்.) போன்ற பயனுள்ள நிகழ்சிகள் ஒலிபரப்பாகி வருகிறது. இதில் காலை 'தேன்தமிழ் நாத'த்தை சேர்க்க முடியவில்லை ஏனெனில் இதில் இப்போது மனைவி கணவனுக்கு எவ்வாறு பணிபுரிய வேண்டும் என்பதை சங்ககால இலக்கிய ஆதாரங்களுடன் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் இவ் நிகழ்சிகளில் சில சந்தர்ப்பங்களில் முதற்சொன்ன ஒலிபரப்புச் (24) சேவைகளின் சாயல். அதாவது மலினப்படுத்தப்பட்ட விசயங்களையும் புகுத்துவது வருத்தத்திற்குரியது. உ–மாக ஒரு சினிமாப் பாடலாசிரியரின் பேட்டியில் 'நீ நிலவோ ஏன் தொலைவோ' என அறுத்திருந்தார்கள். தேசிய சேவைத் தயாரிப்பாளர்கள் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் தேசிய சேவையின் நேயர்கள் அலைவரிசைகளை மாற்றி மாற்றி சினிமாப் பாட்டுக்கேட்டுக்கொண்டு திரிகிறவர்கள் அல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு, சந்திரகுப்த தேனுவர.

ஒரு பீப்பாவின் கதை – விபவி செப்டெம்பர் நிரலில் கூறப்பட்டது. இந்தப் படைப்பின் சிருஷ்டிகர்தா சந்திரகுப்த தேனுவர. இவருடைய ஓவியங்களில் யுத்தத்திற்கெதிரான தமது ஆத்மாவின் ஆவேச உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் யுத்தத்தின் கோரம், அதை நடத்துகின்ற அதிகார வர்க்கத்தின் வக்கிரத்தன்மை மக்களின் அவலமும் சோகமும் கலந்த வாழ்வு, உன்னதமான மனிதநேயம் ஆகிய உணர்வுகளைத் தமது படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

1960 ஏப்ரல் 4ம் திகதி காலியில் தேனுவர பிறந்தார். இவரது தந்தையார் ஒரு பாடசாலை அதிபர். அத்துடன் அவர் ஓர் பிரபல்யமான தொழிற்சங்கவாதி. அன்றிருந்த ஐ. தே. க. அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கலினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 120 ஆசிரியர்களில் தேனுவரையின் தந்தையும் ஒருவர். இதனால் தேனுவர பிள்ளைப் பருவத்திலிருந்தே அரசியல் மயப்படுத்தப்பட்டார். ஏழாண்டுகாலம் அம்பாறையில் தமது கல்வியைக் கற்றார். இதன்பின் புலமைப் பரிசில் பெற்று கொழும்பிலுள்ள தேஸ்ரன் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். 1978 இருந்து 1989 வரை களனிப் பல்கலைக் கழகத்தில் அழகியல் கல்வியைக் கற்றார். 1981 நூன்கலையில் கலைமானிப் பட்டம் பெற்றார்.

ஓவியத்துறையில் முழுமூச்சாக ஈடுபட்டு வந்த இவர் சினிமாத்துறையிலும் நாடகத்துறையிலும் பங்கு பற்றினார். 'சுபசாதக' நாடகத்தின்அரங்க அமைப்பு உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம் ஆகியவற்றிற்காக இவர் அரச விருது பெற்றார். விஜிதா குணரட்ன என்ற அரங்க வல்லுனருடன் சேர்ந்து நாடகத்துறையில் செயற்பட்டதுடன் அவரும் தேவைவரையும் சேர்ந்து ஒரு திரைப்படத்தையும் இயக்கியுள்ளார். இது தமக்கு நல்ல அனுபவத்தைக் கொடுத்துள்ளது என்கிறார்.

1985ல் தேவைவர சோவியத் யூனியனுக்கு உயர்கல்வி கற்கச் சென்றார். 1985 இருந்து 1992 வரை அவர் அங்கு கல்வி கற்றார். இக்காலகட்டம் சோவியத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டகாலமாகும். இங்கு முதுமானிப்பட்டம் பெற்றார். அவர் இலங்கை திரும்பியபொழுது ஓவித்துறையில் ஒரு பலமான அத்திவாரமின்மை இருப்பதை உணர்ந்தார். இந்த இடைவெளியை நிரப்பி ஒரு உறுதியான அத்திவாரத்தையிடும் முயற்றியில் ஏனைய கலைஞர்களுடன் சேர்ந்து உழைத்தார். 1989ல் விடுமுறையில் இலங்கை வந்த பொழுது திரு. சுனில் விஜயசிறிவர்த்தனாவை சந்தித்தார். அப்போது இவர்களும் வேறுசிலரும் ஒரு குழுவாகச் சேர்ந்து கருந்தாடல் நடாத்தியபொழுது 'விபவி' என்ற ஒரு கருத்துக்களம் கருக்கட்டத்தொடங்கியது.

1991ல் மீண்டும் இலங்கைவந்தார். அப்பொழுது அவரது ஆரம்பகால ஓவியங்களையும் புதிய படைப்புக்களையும் சேர்த்து வயனல்வென்ட் கலை அரங்கம் இவரது ஓவியக்காட்சியை நடாத்தியது. இதற்கான ஓவியப் பெயர்ப் பட்டியல் கையேட்டை விபவி தொகுத்து அச்சிட்டது. 1992ல் கொழும்பு தேசிய கலாபவனத்தில் ஒரு ஓவியக் கண்காட்சியை நடத்தினார். 'மொஸ்கோ ஓவியங்கள்' என்ற தலைப்பில் மொஸ்கோவில் இருந்த காலத்தில் சிருஷ்டித்த படைப்புக்களைக் கொண்டதாக இக் காட்சி அமைந்திருந்தது. 1978 இருந்து 1997 வரை இவரது ஓவியங்களை 'தனிக்காட்சியாக' நடாத்தியுள்ளதுடன், 1998 வரை குழுவாகச் சேர்ந்து 18 ஓவியக் கண்காட்சிகளை நடத்தியுள்ளார். சோவியத், பங்களாதேஷ், நியூடெல்கி ஆகிய இடங்களில் நடந்த ஓவியக் காட்சிகளிலும் இவரது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளதுடன் விருதுகளையும் பெற்றுள்ளன.

'எனது ஓவியங்களில் பெரும் பாலானவை 1985ல் இலங்கையில் நடந்த 'ரத்த ஸ்தானத்'தில் ஏற்பட்ட பயங்கரம், மரணம் ஆகியவற்றிற்கு எதிரான உணர்வை பிரதிபலிக்கின்றன, எதிர்பாராத பயங்கரம், மரணம் ஆகியவை பற்றிய எனது உணர்வை இந்த ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் இந்த அரசியல் ரீதியான பயங்கரத்தைப் பற்றிய எனது உணர்ச்சிகளை இந்த ஓவியங்களில் வடித்துள்ளேன். அதாவது எனது அரசியல் பிரக்ஞை, சமூக உணர்வு ஆகிய இரண்டையும் எனது ஓவியங்களில் நான் வெளிப்படுத்துகின்றேன். 1992ன் பின் எமது நாடு படிப்படியாக எப்படி யுத்த சூழ்நிலைக்கு மாறி வந்துள்ளது என்பதை நான் உணர்வுபூர்வமாக அறிந்தேன். அத்துடன் இந்த யுத்த சூழ்நிலை எப்படி கொழும்பிற்குள் காலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவைத்தது என்பதையும் உணர்ந்தேன். கொழும்பு நகரிலுள்ள வீதிகளை இந்த பீப்பாக்கள் முற்றுகையிட்டன என்பதைக் கண்டறிந்தேன். இதன் பிரதிபலிப்புத்தான் எமது 'ஒரு பீப்பாவின் கதை' என்ற ஓவியங்காட்சி.

1992ல் இலங்கையில் சுதந்திரமான நுண்கலை கழகம் ஒன்று நிறுவவேண்டுமென நான் கனவுகண்டேன். 1993 அக்டோபரில் விபவி நுண்கலைக் கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1996ல் விபவி கலாசார மையத்தின் ஆதரவுடன் நுண்கலைக் கழகம் சுதந்திரமாக ஸ்தாபிக்கப்பட்டது. அதனுடைய பணிப்பாளராக சந்திர குப்ததேனுவர ஆகிய நான் நியமிக்கப்பட்டேன். இந்த நிறுவனத்திற்கு எண்மரைக்கொண்ட ஒரு பணிப்பாளர் சபை ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது இச் சபையில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். 31 மாணவர்கள் இப்பொழுது எமது நுண்கலைக் கல்லூரியில் கல்வி கற்கின்றனர். இவர்களில் 21 மாணவர்கள் முழுநேர மாணவர்களாகவும் 10 பேர் பகுதிநேர (சனி, ஞாயிறுகளில்) மாணவர்களாகவும் ஓவியக்கலை பயில்கின்றார்கள். ஓரேயொரு தமிழ் மாணவரும் இக் கல்லூரியில் பயில்கின்றார்.

எதிர் காலத்தில் அதிக தமிழ் மாணவர்கள் எமது கழகத்தில் ஓவியக்கலையைப் பயில வருவாக்கள் என்று நாம் திடமாக நம்புகிறோம். எமக்கு மொழிப் பிரச்சினையில்லை. ஏனெனில் நாம் கட்புலனால் கதைப்பவர்கள். என்று கூறினார் சந்திரகுப்த தேனுவர. யுத்தம் கொடூரமானது. அது மனித ஆத்மாவையே கொன்றொழிக்கின்றது. அதனால் தான் நாம் யுத்தத்தை எதிர்க்கின்றோம். எமது ஓவியங்கள் மூலம், 'ஒரு பீப்பாவின் கதை' மூலம் மக்களைச் சிந்திக்க வைத்து, யுத்தத்திற்கு எதிராகப் போராடுவதற்கு அவர்களது உணர்வைத் தூண்டி இந்தக் கொடும் யுத்தத்திற்கு முடிவுகட்டுவதற்கு நாம் உணர்வுபூர்வமாக உழைக்கின்றோம். என திரு தேனுவர கூறிமுடித்தார்.

**மனித உரிமைகளை உயர்த்திப் பிடிக்கவேண்டுமாயின்,**
**அடிப்படையான மனிதகுல நீதிகளை ஆதரிக்க**
**வேண்டுமாயின் உங்கள் பக்கமுள்ளவர்களுக்கு மட்டும்**
**அதைக் கேட்காதீர்கள். அனைவருக்கும் அந்த**
**உரிமைகளைக் கேளுங்கள்.**
**நமது கலாசாரம், நமது தேசம் இவை கூட்டுகின்ற**
**விஷயங்கள் மட்டுமே சரியானவையாக இருக்குமென**
**நினைப்பது தவறு.**

**-எட்வர்ட் செய்த்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிவப்பு மிதந்து
நீளோடையில்
இடக்கையால்
அள்ளிமோறும் துடிப்பில்
வலக்கால்
எட்டியுதைந்தது
நெஞ்சில்

இதயத்தின்
பிரிவுச்சுவரழிந்து
வலதின்
செங்கோலாட்சி

வலது வாயும்
இடது வாயும்
உச்சரித்துக்கொண்டன சமாதானம்

உடலில் ஓடும்
செங்குருதித் துணிக்கைகள்
பிரிக்கப்பட்டன
இனத்தின் பேரால்

பிரியப்பட்ட
சிறுதுணிக்கைகள்
தத்தம் அடையாளத்தை நிறுவிட

இடக்கண்ணும்
மறைக்கப்பட்டது
இரத்தச் சுவர்களாலும்
இடது என்புகளாலும்
வலது தசைகளாலும்

செஞ்சிவப்பு மிதந்த
நீளோடையில்
இடக்கையால்
அள்ளிமோர — வலக்கை!!!

வலக்கால்
எட்டியுதைய
நெஞ்சில் — இடக்கால்!!!

காயமே
மருந்தாகி......!

அந்தந்த வயதில்
அவரவர்கள் பொதிகளைச்
சுமக்கும் கழுதைகளாக
நாமிருந்தோம்!

காலப் போக்கில்...
பொதி- மூட்டைகளாகிக்
கூடவே...
சவாரி செய்யவும்
ஏறியமர்ந்தார்கள்!

அவர்கள் போட்ட
பாதையில்,
அவர்கள் நோக்கிய
திசையில்,
அவர்கள் சுட்டுவிரல்
காட்டும் இலக்கில்......
எம்மை-
இழுத்துப்போனார்கள்!

எப்போதும்-
அப்படியே
இருக்கமாட்டோமா என்றுதான்
ஏக்கம் அவர்களுக்கு!

இப் புதிய கழுதைகளுக்கு
இதுகாலம் தந்த
பாடம் அல்ல.....
காயம் தந்த ஞானம்!

- அனோரா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபவி நிகழ்சி

ஒக்டோபர்.

10 சனி — மாதாந்த சினிமா — மாலை. 3.00
ஸ்ரீபன் ஸ்பில்பேக்கின்
'ஷிண்டலஸ் லிஸ்ட்'
**Schindlers List.** (3மணித்தியாலம்)

31 சனி — 'மாக்சியமும் இலக்கியமும்.' — காலை. 9.00
எம். ஏ. நுஃமான்.
கா. சிவத்தம்பி.

இச் செய்தி நிரல் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில், இந்த மடலின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்து வருவதுடன், இம் மடலுக்கு காலத்துக்குக்காலம் ஆக்கங்களைத் தந்து பங்களிப்பு செய்து வருகின்றவரும், சிறந்த சினிமா விமர்சகருமான, நண்பர் சசி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்று (செப். 29) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணமாகிக் கொண்டிருக்கையில் அவர் பயணித்த விமானம் காணமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

**சினிமா என்பது 'வெறும் பொழுதுபோக்குச் சாதனமோ தூய கலைவெளிப்பாட்டு ஊடகமோ என்றில்லாமல், தீவிர அரசியல் தளத்தில் நிலவும் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும், ஜனநாயக உரிமைகளுக்காக'வும் செயற்படும் ஆற்றல் அதற்குண்டு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




අමිතා ඉන්දිරානි, **Amitha Indirani,** அமிதா இந்திராணி





ඉන්ද්‍රජිත් වෑවලගේ, **Indrajith Wewalage,** இந்திரஜித் வேவலகே




අනෝලි පෙරේරා, **Anoli Perera,** அனோலி பெரோரா




ජගත් වීරසිංහ, **Jagath Weerasinghe,** ஜகத் வீரசிங்க





බල්බීර් බෝධ්, **Balbir Bodh,** பல்பீர் போத்




කටුවන පියානන්ද හිමි, **Rev. Katuwana Piyananda.** வண: கட்டுவன பியானந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






කිංස්ලි ගුණතිලක Kingsley Gunetileke, கிங்ஸ்லி குணத்திலக்க





චන්ද්‍රගුප්ත තේනුවර.
சந்திரகுப்தா தேனுவர
Chandragupatha Thenuwara,





කොරලේගෙදර පුෂ්පකුමාර Koralegedara Pushpakumara, கோரலேகெதர புஸ்பகுமார





ප්‍රදීප් චන්ද්‍රසිරි Pradeep Chandrasiri, பிரதீப் சந்தரசிரி.

How many times can a man turn his head
Pretending he just doesn't see

How many years can some people exist?
Before they are allowed to be free

How many times must the cannon balls fly?
Before they're forever banned?

How many deaths will it take till he knows?
That too many people have died

How many ears must one man have?
Before he can hear people cry

මිනිසෙකු වීමට පුදුසෙකු වන්නට
මහමං කීයක් තරණ කරන්නද?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இவர்கள்?

யார் இவர்கள்
யாருடைய அனுமதியில்
யுத்தம் தொடுத்துள்ளனர்

பாதையெங்கும்
பாசியக்கூட்டம்
ஆயுதமேந்தி
ஆணவப்போர்க்கோடு
போர் புரியும் நோக்கில்
புறப்பட்டு வந்துள்ளார்களே
யார் இவர்கள்......?

உயிர் பிச்சை கேட்கவே
உறுமிக்கொண்டு
வெறிகொண்டு
சுட்டுக்கொள்கிறார்களே....
யார்...... இவர்கள்.......?

சன்னங்கள் பாய்வதும்
சனங்கள் மடிவதும்
ஒவ்வோர் கணங்களும்
நாற்றிசையும் நிகழும்

இருப்பினும்......!

யார் இவர்கள்
மனித உணர்வே இல்லாத
மிருகங்களா? இல்லை
யார்....... இவர்கள்......!

நேற்றுவரை தோழமையாய்
சகஜமாகப் பழகிய
சாதாரண மனிதர்கள்தானென்றோ....

ஆனால் இன்று......!
அதிகாரத்தைக் கையிலெடுக்க
அராஜகவெளிக்குப் பலியாகி
மூளை மழுங்கிய
உயிரற்ற முண்டங்களே.....!

ஆம்!
யார் இவர்கள்...?
யார் பெரியவரென
பார்த்தே விடுவதென்றே
உறுதியுடன் களத்தில்
ஒருவருக்குப் பலபேரென
சுட்டுமடிகின்றனரே...

யார் இவர்கள்
யார்? யார்?
இவர்கள்... யார்...?

ஒவ்வோர் நிகழ்விலும்
உயிர்கள் பறிபோயினும்
பயத்துடன் வாழ்ந்த
காலமும் போய்
மானுடர் விழிகள்
அனல் கக்கும்
காலமும் வருமோ......!

1988 ஏப்பிரல்.
-சூர்யாஷா-

# வாசிப்பு.

பிறந்த உடனேயே- கண்களின் அரும்புப் பார்வை உலகில் பட்ட உடனேயே- யாரும் படிக்கத் தொடங்கிவிடுவதில்லை. நாம் வாழ்க்கையைத் தொடங்குவது வாயாலும், கையாலுந்தான். நம் கண்கள் அப்போதே தாள்களில் உள்ள மையால் கறைபட்டு விடுவதில்லை. ஊற்றாகி, அருவியாகி வளர்ந்து வரும் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்தில் யாரும் படிப்பதில்லை. படிக்க வேண்டுமென்று யாருக்கும் தோன்றுவதுமில்லை. ஒரு புத்தகத்தினுள்ளேயோ அல்லது அதில் உள்ள ஒரு வாக்கியத்தினுள்ளேயோ புகுந்து புறப்படும் எண்ணங்கூட வருவதில்லை. வாழ்க்கையின் தொடக்கத்தில் சிக்கல்கள் மிகக் குறைவு. தன்னிலை புரியாத பருவம் அது. அப்பருவத்தில் எங்கும் எதிலும் தடை என்பதே கிடையாது. அப்பருவத்தில் நாம் ஒவ்வொருவரும் ஓர் எல்லையற்ற பெரு நிலப்பகுதியில் வசிக்கிறோம். அப் பெருநிலப்பகுதி நாம் ஒவ்வொருவருக்குள்ளேயுமே அடங்கி இருக்கிறது. அங்கு நாம் விருப்பம் போல் விளையாட பரந்துபட்ட திடல்கள் உண்டு. கற்பனை வளம் பெருக்கும் புல் தரைகள் உண்டு. முதல் அடி எடுத்து வைத்த உடனேயே தென்படும் ஆறுகள் உண்டு. இவை அனைத்தையும் அரவணைத்து நிற்கும் அன்னை எனும் பெருங்கடல் உண்டு. அலை என அங்கு ஒலித்துக் கொண்டிருக்கும் அவளது குரல் உண்டு. இவையாவும் இடைவெளியற்ற வண்ணம் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை: ஓர் எல்லையற்ற பெருவெளி- ஆனால் எளிதில் அளந்து விடக்கூடிய ஒன்று. அங்கு புத்தகங்களுக்குஇடமில்லை. படிப்புக்கு இடமில்லை. படிப்பதில் வரும் சோகத்தோடு வியக்க வைக்கும் சுகத்திற்கு இடமில்லை. அதனால்தானோ என்னவோ குழந்தைகள் தங்கள் தாய்மார்கள் படிப்பதைத் தடுக்கின்றன. தங்கள் தாய்மார்களின் முழு கவனத்தை- கனவுகளின் கறைபடாத கவனத்தை- தம் வசப்படுத்திக் கொள்ள முற்படுகின்றன. படிப்பென்பது குழந்தைப் பருவத்தின் பிற்பகுதியில் தான் தொடங்குகிறது. அப்படித்தொடங்கும் போது, அதுவரை தான் வாழ்ந்த உலகத்திடமிருந்து குழந்தை வேதனையோடு விடைபெறுகிறது. ஒவ்வொரு எழுத்தையும் கற்கும்போது அக்குழந்தைக்கு தனிமையில் போராடி இரத்தம் சிந்துவது போன்ற ஒரு நிலை ஏற்படும். பெற்றோர் தங்கள் குழந்தைகள் படிப்பதைப் பார்த்து, கற்பதைப் பார்த்து, துடிப்பதைப் பார்த்து இன்புறுவர். மற்ற குழந்தைகளைப் போல தம் குழந்தையும் அகர வரிசையை நன்கு கற்று, எழுத்துக்களை வார்த்தைகளாய்- வார்த்தைகளை வாக்கியங்களாய் மாற்றி மொழியைக் கரைத்துக் குடிக்கவேண்டுமென்ற ஏக்கத்தில் இருப்பார்கள். வாசிக்கக் கற்பது ஒரு விசித்திரமான கலை. அதில் எப்படித் தேர்ச்சி பெறுவது என்பது யாருக்கும் தெரியாது. அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அது பற்றிக் கவலை இல்லை. ஆனாவல் திடீரென ஒரு நாள் ஏட்டில் உள்ள வார்த்தையொன்றைக் கண்டு பிடித்து அதை உரக்கப் படிக்கின்றோம். அத்தருணம் நாம் இறைவனின் ஆற்றலில் சிறிது பறித்துக்கொள்கிறோம். உடனே நாம் அது வரை வாழ்ந்த சொர்க்கத்தில் ஒரு விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. பிறகு அடுத்தடுத்த வார்த்தைகளைப் படிக்கிறோம். சிறிது சிறிதாக நம் பிரபஞ்சம் வாக்கியங்களாக, வெள்ளைக் காகிதத்தில் சிதறிக்கிடக்கும் நிலப்பரப்புகளாக மாறிவிடுகிறது. இதுவே நம் பள்ளி வாழ்க்கையின் ஆரம்பம். குழந்தைப் பருவத்தில் நாம் ஆற்ற வேண்டிய தொழிலின் தொடக்கம். நாம் நம் அறியாப் பருவத்தை இழந்து வாசிப்பில் ஈடுபட்டு, ஏட்டில் உள்ள எழுத்துக்களைக் கண்டுபிடித்து, அவற்றின் பொருளை அரை குறையாகவாவது தெரிந்து கொள்ள முற்படும்

போது தான் எத்தனை மகிழ்ச்சி? மகிழ்ச்சி என்பதை விட இன்பம் என்றே சொல்லலாம். ஓர் அச்சம் கலந்த இன்பம்! ஏனெனில் எந்த ஓர் இன்பத்தோடும் அச்சமும் கலந்தே இருக்கும். புத்தகங்களெல்லாம் சுகத்தோடு ஒரு சோகத்தையும் சார்ந்தே இருக்கும். அவை ஓர்உலகத்திலிருந்து மற்றோர் உலகத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும். ஆனால் நம்மில் பெரும்பாலோருக்குப் புத்தகங்களோடு ஏற்பட்ட அந்த முதல் அனுபவத்திற்குப் பின் ஒருவித சலிப்பு ஏற்பட்டு விடுவதுண்டு. ஏனெனில் நாம் படிப்பது என்பது வகுப்பில் மதிப்பெண் பெறுவதற்கதாக அல்லது ஆலைகளில், அலுவலகங்களில் ஒரு வேலை தேடிக் கொள்வதற்காக என்றாகி விடுகிறது. எவ்வித விருப்பமுமின்றி ஒருவிதத் தூண்டுதலின் காரணமாகவே நாம் வாசிக்க நேரிடுகிறது. அப்படி செய்வதால் அங்கு மகிழ்ச்சிக்கோ இன்பத்திற்கோ இடமில்லை. படிப்பை முடித்து வாழ்க்கை எனும் பாலைவனம் வரை செல்வதற்கு, ஒரு கட்டாயத்தின் பேரில் சிலவற்றைப் படிக்கிறோம். பிறகு நாம் படிப்பதையே நிறுத்திக் கொள்கிறோம். ஒரு பத்திரிகை கூட படிப்பதில்லை. வீட்டில் புத்தகங்களே வைத்திராத ஒரு கூட்டம் இருக்கிறது. அக்கூட்டத்தோடு நாம் சங்கமமாகி விடுகிறோம். எழுத்தாளர்களுக்கெல்லாம் நாம் ஒரு புரியாத புதிராகி விடுகிறோம். அதன் பின் நம் வாழ்க்கையில் புத்தகங்கள் குறுக்கிடுவதில்லை. புத்தகப் பேய்கள் அண்டுவதில்லை. எப்போதாவது ஓர் அகராதி அல்லது கலைக்களஞ்சியம் நாம் வாங்கிட நேரிடும். வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யும் திறமை வாய்ந்த புத்தக வியாபாரி ஒருவர் அவற்றை நம் தலையில் கட்டி விடுவது உண்டு. ஆனால் அவற்றையும் நாம் படிப்பதில்லை. பிறகு பார்த்துக்கொள்ளலாம்-படித்துக்கொள்ளலாம் என்று வைத்துவிடுவோம். அல்லது நம் சந்ததியினர் படித்துக் கொள்வார்கள் என நினைப்போம். நம்மைப் பொறுத்தவரை அவையுங்கூட ஒரு வித தட்டு முட்டுப் பொருட்களே. அவை சற்று விசித்திரமானதாக இருக்கலாம். 'ஓக்' மரத்தினாலோ அல்லது 'பைன்' மரத்தினாலோ அல்லாமல் காகிதத்தால் செய்யப்பட்டிருக்கலாம். அவற்றில் சில இருபது பகுதிகளைக் கொண்டிருக்கலாம். இருப்பினும் அவைவெறும் தட்டு முட்டுப் பொருட்களே. தவணை முறையில் பணம் செலுத்தி வாங்கி இருப்போம். ஆனால் வாங்கியவற்றைப் படிப்பதில்லை. விதிவிலக்காக ஒரு சிலர் உண்டு. இவர்கள் மிகச்சிலரே: மிக மிகச்சிலரே. இவர்களே உண்மையான வாசகர்கள். ஏனையோர் ஆர்வத்தோடு வாசிப்பதை நிறுத்திக்கொள்ளும்போது- அதாவது எட்டு அல்லது ஒன்பது வயதில்- இவர்கள் உண்மையான வாசகராகின்றனர். அதன்பின் இவர்கள் வாசிப்பதை நிறுத்துவதில்லை. இவர்களுக்கு இது ஒரு முடிவற்ற அனுபவம். அச்சமும் இன்பமும் கலந்த அனுபவம் புத்தகங்களோடு இவர்களுக்கு முதலில் ஏற்பட்ட தொடர்பிலிருந்து இவர்களால் விடுபட முடிவதில்லை என்றே சொல்லலாம். ஆகையால் இவர்கள் தங்கள் ஆயுட்காலம் முடியும் வரை படித்துக் கொண்டே இருப்பார்கள். மொழிகளோடும், ஆன்மாக்களோடும் இவர்கள் தனிமையில் உறவாடிக் கொண்டே இருப்பார்கள். இத்தனிமை இவர்களுக்கு இனிமையையே அளிக்கும். இவர்கள் தனிமையைத் தேடிச் செல்லச் செல்ல இத்தனிமையின் நீட்சியும் அதிகரித்துக் கொண்டே போகும். இவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு படிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு கற்றதும் குறைவாகவே இவர்களுக்குத் தோன்றும். இவர்கள்தான் எழுத்தாளர்களையும், புத்தக வியாபாரிகளையும், பதிப்பாசிரியர்களையும், ஆசிரியர்களையும் வாழவைக்கிறார்கள். வாசிப்பதில் ஆர்வம் கொண்டவனுக்கு நல்ல நூல், நல்லது அல்லாத நூல், பத்திரிகை, ஆகிய அனைத்துமே வாசிக்கத் தகுந்தவைதான். அறிவுப் பசி கொண்டவனுக்கு அவையாவுமே தீனியாக அமைந்து விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் எதையுமே வாசிக்காதவர்கள் ஒரு புறம். எப்போதுமே எதையேனும் வாசித்துக்கொண்டே இருப்பவர்கள் மறுபுறம். இவ்விரு சாரார்களுக்கிடையே எல்லைக்கோடு உண்டு. அவ்வெல்லைக்கோடு மக்களிடையே வேறுபாடு ஏற்படுத்தும் பணம் போன்ற பல்வேறு தடைகளை விட உறுதியானது. பொருள் இல்லாதவர்க்கு எதுவுமே இல்லா குறை. படிப்பில் ஆர்வம் இல்லாதவர்க்கு குறை இல்லாதிருப்பதே குறை. பணக்காரன் ஏழை ஆகியோருக்கிடையே உள்ள தடுப்புச் சுவர் கண்ணுக்குத் தெரிந்த ஒன்று. அச்சுவர் உடைந்து போகலாம்; வழிவிடலாம். ஆனால் படிப்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள தடுப்புச் சுவர் மண்ணுக்குள் புதைந்தது போன்ற ஒன்று. கண்ணுக்குத் தெரியாதது. எவ்வளவோ பணக்காரர்கள் நூல்களில் ஒன்றைக் கூட தொடாமல் இருக்கக்கூடும். எவ்வளவோ ஏழைகள் படிக்கும் ஆர்வத்தில் தவித்துக் கொண்டிருக்கக்கூடும். உண்மையில் ஏழைகள் யார்? பணக்காரர்கள் யார்? இறந்தவர் யார்? வாழ்பவர் யார்? சொல்லுவது கடினம். எதையுமே படிக்காத கூட்டம் சொற்களை மதிக்காத கூட்டம். அக்கூட்டத்திற்குச் சொற்கள் முக்கியமல்ல. பொருட்குவியலே முக்கியம். பணமுள்ளவனுக்கு சொகுசுக் கார் தேவை. பணமில்லாவனுக்கு சில சில்லறை பொருட்கள் தேவை. ஆனால் வாசிப்பதில் நாட்டம் கொண்டவன் அன்றாட வாழ்க்கையை விட்டு விலகி காற்றின் கனலில் குளிர் காய்ந்து கனவுக்கு விலை பேசுகிறான். வாசித்தறியாதவன் வாழ்க்கையோ ஒருகட்டுண்ட வாழ்க்கை. பொருட்கூட்டத்தின் நெரிசலில் வாழும் வாழ்க்கை. சேமித்த பொருட்களே சேமித்தவனை ஆக்கிரமித்துக் கொள்ளும் வாழ்க்கை. மர்மக்கதைகளில் வரும் சில வீடுகளைப் பற்றி படித்திருப்போம். அவற்றைத் திறந்ததுமே அவற்றின் பரண்வரை எங்கு பார்தாலும் தேவையற்ற பொருட்களின் குவியலே. அதுபோலத்தான் வாசித்தறியாதவன் வாழ்க்கையும் இவ்வுலகில் உழைத்துக் காய்ப்பேறாத கரம் கொண்டு செல்வத்தில் வாழ்வோரும் உண்டு; மென்மையான கரம் கொண்டு கனவு உலகில் வாழ்வோரும் உண்டு. செல்வம், கனவு எதுவுமே இன்றி கை முடம் பட்டு வாழ்வோரும் உண்டு. எழுத்தாளர்களின் படைப்புகள் உருவாவதற்கு இவ்வேறுபாடுகளே காரணம். இதுவன்றி வேறொன்றும் காரணமாக இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. அப்படி வேறொன்று இருக்குமானால் அதில் அர்த்தமில்லை. சமுதாயத்தின் வெவ்வேறு பிரிவினரிடத்தும் சென்றடைதல்; பிரிவினைகளை ஒழித்தல்; தீண்டப்படாதவர்களைத் தீண்டுதல்; என்றுமே வாசிக்காதவன் கையில் ஒரு நூலை அளித்தல்; இவையே எழுதுவதின் மகத்தான குறிக்கோள்களாக அமைய முடியும் என்பதில் ஐயமில்லை.

*கிறிஸ்தியான் பொபேன் எழுதிய 'திருநாள் சிற்றாடை' என்ற நூலின் முன்னுரை.*

# நூல் வெளியீடு.

நூல்: புதிய பூக்கள். (சிறுவர் இலக்கியம்)

நூலாசிரியர்: வ. இராசையா.

17. 10. '98 சனி பி. ப. 4.00 மணி


இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்க மண்டபம், வெள்ளவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் நாரைகள்

ஆயிரம் நாரைகள்



நாரை ஆயிரம் ஆண்டுகள் வரை வாழ்வதாக நம்பும் ஜப்பானியர்களுக்கு 'நாரை' தீர்க்காயுசைக் குறிக்கும் சின்னம். எனவே ஜப்பானிய மொழியில் 'சுரு' என அழைக்கப்படும் நாரையைச் சுவர்களிலும், திரைச்சீலைகளிலும், ஆடைகளிலும் பரவலாகக் காணலாம். வண்ணக் காகிதங்களை மடித்து உருவங்கள் செய்யும் கலையான 'ஓரிகாமி' பாணியிலும் சிறிய நாரைகள் பலவற்றை செய்வது வழக்கம்.

இவ்வாறு செய்த ஆயிரம் நாரைகளைத் தொடுத்து செய்த (இந்த மாலைக்கு 'சென்பா சுரு' எனப் பெயர்) மாலையை நோய்வாய்ப்பட்டவருக்கு அளித்தால் நோய் குணமடைந்து தீர்க்காயுசுடன் வாழுவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. இதனால் பிணியாளிகள் சுகம் பெற அவர்களுக்கு 'சென்பா சுரு' மாலை அனுப்பப்படுகிறது.

புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்த சதாக்கோ சஸாக்கி என்ற ஜப்பானிய சிறுமி, ஆயிரம் நாரைகள் மாலை பல செய்து தன்னைப் போல் நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடைய அனுப்பிக் கொண்டிருந்தாள், தான் மரிக்கும் வரை சதாக்கோவுக்கு புற்றுநோய் ஏற்பட்டதற்குக் காரணம் ஹிரோஷிமா மீது அமெரிக்கா வெடித்த அணுகுண்டின் கதிர்வீச்சு. அணுகுண்டு வீச்சு நடந்தது 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி. சதாக்கோ இறந்தது 1955ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ம் தேதி.

ஹிரோஷிமாவின் சமாதனப் பூங்காவில் சதாக்கோவுக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. இதைச் சுற்றி குவியல்களாகவும் தோரணங்களாகவும் வல வண்ணத்திலான ஆயிரம் நாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகள் எனவே இந்த நினைவுச் சின்னத்தை 'ஆயிரம் நாரைக் கோபுரம்' என்றும் அழைக்கின்றனர்.

'ஓடோ' எனும் நதியின் முகத்துவாரத்தில் அமைந்த ஹிரோஷிமா நாலூறு ஆண்டுகளாக வணிக மையமாகச் செயல்பட்டது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ராணுவ தளமாகப் பரிணமித்தது. அதுவே இந்த நகரின் விதியை நிர்ணயித்தது.

1945ம் ஆண்டு 6ம் தேதி ஹிரோஷிமா துயிலில் ஆழ்ந்திருந்தது. நள்ளிரவில் விமானத் தாக்குதல் ஆபத்தை எச்சரிக்கும் அபாய மணி அதிகாலையில் விமானத் தாக்குதல் ஆபத்து இல்லை என ஒலிபரப்பப்பட நகரவாசிகள் பெருமூச்சு விட்டுவிட்டு அன்றாட அலுவல்களில் ஈடுபடத் தயாராகினர். விமானங்கள் குண்டு மழை பொழியும்போது மக்கள் தப்பித்து ஓட வழி உண்டாக்கும்படியாக பல கட்டடங்களை இடிக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது.

சதாக்கோ, அப்போது ஹிரோஷிமாவில் இருந்த ஓர் உயர்நிலைப்பள்ளியில் மாணவி. போர்க்கால நெருக்கடியில் வேலை செய்யப் போதிய ஆட்கள் இல்லாத நிலையில் 14 வயதுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கட்டடங்களை இடிக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அன்று ஹிரோஷிமாவின் மீது விரிந்த வானம் மேகங்களற்று வெறிச்சோடிக் கிடந்தது. காலை சுமார் எட்டு மணியளவில் மூன்று வெள்ளி நாரைகள் வானத்தில் மிதந்து வந்தன. அவை அமெரிக்கப் போர் விமானங்கள் என்பதை அறிந்து கீழேயிருந்த நகர மக்கள் வாயடைத்து நிற்க முன்னனே வந்த விமானம் ஒன்றின் அடிப்பாகத்திலிருந்து கரிய முட்டை போன்ற ஒன்று தரையைநோக்கி விழ ஆரம்பித்தது. பின்னர் அது நடு வானத்தே சூரியனை விடப் பல மடங்கு பிரகாசமான தீக்கோளமாக மாறியது. இந்தத் தீக்கோளம் விசுவரூபம் எடுத்து தரையைத் தொட்டு சுமார் 1 கி.மீ வட்டத்தில் இருந்த உயிரினங்கள் அனைத்தையும் பஸ்பமாக்கியது.

இதன் வெம்மையால் (சுமார் 3000 செல்ஸியஸ்) ஓடுகள் உருகின. கருங்கல் மணல் போல் பொடியானது. ராட்சத காளான் போன்ற ஒரு புகை மண்டலம் வானை நோக்கிக் கிளம்பியது. வெப்பத்தால் காற்று மண்டலம் திடீரென விரிவடைய கண்ணுக்குத் தெரியாத மதில் ஒன்று அசுர வேகத்தில் தாக்குவது போன்ற அதிர்வலைகள் உண்டாகின. இந்த அதிர்வு, கட்டடங்கள், பாலங்கள், கம்பங்கள் இவற்றைத் தரைமட்டமாக்கின. 2 கி.மீ தூரம் வரை இருந்த மரக்கட்டடங்கள் சீட்டுக்கட்டு சரிவதுபோலச் சரிந்தன. வெடிப்பால் ஏற்பட்ட ரேடியோக் கதிர்வீச்சு எஞ்சியவர்களைத் தாக்கியது. அணுகுண்டு வெடிப்பிற்குப் பின் பிழைத்தவர்களைக் காப்பாற்ற வந்தவர்கள் தெங்கிய ரேடியோக் கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டனர்.

ஒரு கணக்குப்படி குண்டு விழுந்த போது ஹிரோஷிமாவில் இருந்தவர்கள் 40,000 ராணுவத்தினர். 8,400 பள்ளி மாணவர், 3,50,000நகர மக்கள். பல கொரியர், சீனர் மற்றும் 10 அமெரிக்க யுத்தக் கைதிகள். அணுகுண்டு வெடிப்பால் உடனே மரித்தவர்கள் போக சதாக்கோ போல பல மாதங்கள் அல்லது வருடங்கள் கழித்து மாண்டவர்கள் பலர். மரித்தவர்களின் எண்ணிக்கை தோராயமாக ஒன்றரை லட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சாகாமல் இன்றும் ரேடியோக் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு நடைப்பிணமாக வாழ்பவர்களின் எண்ணிக்கை 3,30,000. இவர்கள் அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம் ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த இயக்கத்தினர் தம் மீது அணுகுண்டு வீசப்பட்டதை எதிர்த்து அமெரிக்கா மீது வழக்குத் தொடரவிருக்கின்றனர்.

இந்த இயக்கத்தில் ஒருவர் அகிஹிரோ தகாஹஷி. அணுகுண்டு விழுந்தபோது இவருடைய வயது 14. தனது ஆசிரியரின் மேற்பார்வையில் சக மாணவர்களுடன் பள்ளிக்கூட மைதானத்தில் இருந்தபோது, அணுகுண்டு வானத்தில் வெடிக்க ஹிரோஷிமா தரைமட்டமானது. சுமார் 30 அடிக்கு தூக்கி எறியப்பட்ட தகாஹஷியின் ஆடைகள்நார் நாராகிப் போனது. ஊடே தோல் உரித்து தொங்க உடம்பு ரத்தப் பாளமாகியது. வேதனையைத் தணிக்க அருகிலிருந்த ஆற்றை நோக்கி ஓடினான் சிறுவன் தகாஹஷி. சிதறிய மனித உடலின் உறுப்புகள் எங்கும் தெரிந்தன. சின்னா பின்னமாகிய பெண் ஒருத்தியை உடம்பைப் பற்றியவாறு ஒரு கைக்குழந்தை ஓலமிட்டுக்கொண்டிருந்தது. ஆற்றின் கரையை அடைந்த நேரத்தில் நகரமே பற்றி எரிவதை உணர்ந்தான்.

ஆற்றின் பாலத்தினடியில் ஒளித்து தீப்பிழம்புகளிலிருந்து தப்பித்துக் கொண்டான். எரிச்சலைத் தணிக்க ஆற்றில் மூழ்கியெழுந்த தகாஹஷி தான் உயிர் பிழைத்தது தன் பாக்கியம் என நினைத்துக் கொண்டான். சற்று நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. தீயை ஓரளவு குறைத்த மழையின் துளிகள் கரிய நிறத்தில் விழுந்தன. சுவர் மீது எண்ணெய் வழிவது போல ஒழுக ஆரம்பித்தன. அன்று தகாஹஷி அறியாதவை பெய்த அந்தக் கரிய மழை ரேடியோக் கதிர் வீசும் துகள்கள் நிரம்பிய புகை மண்டலத்தைக் கரைத்து பூமிக்குக் கொண்டு வந்த மழையென்பதயும், அதனால் தன் எஞ்சிய வாழ்நாளை நடைப் பிணமாகக் கழிக்கப் போவதையும்!

ஹிரோஷிமா மீது அமெரிக்கா அணுகுண்டை வீசியது மக்களைப் புழுக்களாகப் பாவித்து அவர்கள் நடத்திய விஷப் பரிசோதனை. இந்தக் கொடுமையைச் செய்த அமெரிக்காவை உலக நாடுகள் போர்க் குற்றவாளியாக விசாரணை செய்ய வேண்டும்.,'அணுகுண்டு வெடிப்பால் அன்று சாகாமல் இன்று குற்றுயிரும் குலையுயிருமாய் என்னைப் போல் இருப்பவர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.' என்று ஆவேசமாகப் பேசிய தகாஹஷி தான் வாழப் போகும் நாட்களை எண்ணிச் சலிப்படைந்தார்.

அங்கஹீனப்பட்டு நோயால் நலிந்து வாடும் தகாஹஷியின் நகங்கள் பருத்து கரடியின் நகங்கள் போல நீண்டு வளர்வது ரேடியோக் கதிர்வீச்சால் வந்த வினை. 'நியூயார்க் வர்த்தக மையத்தில் ஒரு சாதாரண குண்டு வெடித்தபோது கொதித்தெழுந்து குற்றவாளிகளைப் பிடிக்க சர்வதேச அளவில் செயல்பட்ட அமெரிக்கா, இப்போதாவது ஹிரோஷிமா, நாகசாகியில் தாம் அணுகுண்டு வீசியதைப் பற்றி எண்ணி மனந்திருந்தட்டும்......' என்றார் ஒரு ஜப்பானியர். இவ்வளவு மக்கட் சேதம் ஏற்படும் எனத் தெரிந்திருந்தால் ஒருவேளை அமெரிக்கர்கள் அணுகுண்டு வீசியிருக்க மாட்டார்கள் என்று சிலர் கூறக் கேட்கலாம். ஹிரோஷிமா அழிவுக்குப் பிறகு மூன்று நாட்களில் நாகசாகி தாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுண்டு பற்றிய ஆய்வு, முதலில் ஜெர்மனியில் தொடங்கப்பட்டது. என்றாலும் பின்னர் அமெரிக்காவிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, பெரும் செலவில் தீட்டப்பட்ட இந்தத் திட்டத்தை சங்கேத மொழியில் 'மன்ஹாட்டன்' திட்டம் எனக் குறிப்பிட்டனர். 1942ம் ஆண்டு அமெரிக்கா தன் முதல் அணுகுண்டைத் தயாரித்தது. 1945ம் ஆண்டு ஜூலை மாதம் 6ம் தேதி நியூமெக்ஸிகோ மாகாணத்தில் உள்ள அலமோகோர்டோ பாலைவனத்தில் சோதனை வெடிப்பு நடத்தப்பட்டது. அணு யுகம் பிறந்தது.

இந்த சோதனை வெடிப்பில் அணுகுண்டினால் ஏற்படும் அழிவு பற்றி அறிந்த பின்னரே அமெரிக்க ராணுவத் தலைமையகம் ஜப்பான் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்த முடிவு செய்தது. பிறகு கீழ்கண்ட சுருக்கமான ஆணை பிறப்பித்தது. 'பருவ நிலையைப் பொறுத்து 509 கூட்ட 20ம் விமானப்படை முதல் குண்டை 1945 ஆகஸ்ட் 3ம் தேதிக்குப் பிறகு ஹிரோஷிமா, கொகூரா, நிகாத்தா, நாகசாகி நகரங்களின் மீது வீச வேண்டும்.' குண்டு வெடிப்பால் ஏற்படும் அழிவு சக்தியை பூரணமாகப் பயன்படுத்த, குண்டு தரையில் விழுந்து வெடிக்காமல், நகரங்களின் மீது வானத்தில் வெடிக்குமாறு ஆயத்தம் செய்யப்பட்டது.

ஆணையிட்டபடி குறிப்பிட்ட நாளில் பசிபிக் கடலில் அமைந்திருக்கும் டினியன் தீவிலுள்ள தளத்திலிருந்து மூன்று பி. ரக விமானங்கள் சுமார் 2700 கி.மீ. தாண்டி ஜப்பானை நெருங்கின. அதில் முன்னாலே பறந்த 'எனோலா கேய்'(நுஜெடய புயல) என்றழைக்கப்படும் விமானத்தில் நான்குடன் எடை (10 அடி நீளம் 2. 5 அடி அகலம் ) கொண்ட அணுகுண்டு அடக்கம் குண்டை அமெரிக்க விமானிகள் 'லிட்டில் பாய்' என்று செல்லமாக அழைத்தனர்.

எனோலா கேய் 8,500 மீட்டர் உயரத்தில் ஹிரோஷிமா மீது பறந்து தன் சுமையை இறக்கிவிட்டுச் செல்ல, கூட வந்த விமானங்கள் நடக்கப் போவதை நிதானமாகப் படம் எடுக்க ஆரம்பித்தன. பிறகு திரும்பிச் சென்றன. அணுகுண்டை வீசிய விமானிகள் அமெரிக்காவில் பெரும் தேசிய வீரர்களாகக் கருதப்பட்டனர். அதில் ஒருவன் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நேர்காணலில் தான் 'தன் கடமையைச் செய்ததாகவும், அது பற்றித்தான் வருந்தவில்லை' என்றும் கூறினான்.

ஹிரோஷிமாவில் மறைந்தவர்களின் நினைவாக நந்தா விளக்கு எரியும் சின்னத்தின் நடுவில் ஒரு கல்லறை. இதில் அணுகுண்டு வெடிப்பில் அழிந்தவர்களின் பட்டியல் ஒன்றுள்ளது. ஆனால் இதர போர்ச் சின்னத்திற்கும் இதற்கும் ஒரு வித்தியாசம். இந்தப் பட்டியலில் அன்று ரேடியோக் கதிர்வீச்சுக்கு ஆளாகி இன்று இறப்பவர்களின் பெயர்கள் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகின்றன! இந்த நினைவுச் சின்னத்தின் மீது ஒரு வாசகம் "இங்கு மறைந்தவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடையட்டும் இந்தக் கொடுமை மறுபடி நடக்கக்கூடாது."

ஆதாரம்: ஹிரோஷிமா சமாதான நினைவு அருங்காட்சியக குறிப்பேடுகள். ஜப்பானியப் பத்திரிகை நேர்காணல்.
நன்றி-புதிய பார்வை. 1995 அக்டோபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**?** பாலியல் சுதந்திரத்துக்கு ஏதேனும் எல்லைகள் இருக்க வேண்டுமென நினைக்கிறீர்களா.

நாம் எல்லோருமே நம்முடைய முன் முடிவுகளின் பிணைக் கைதிகளாய் இருக்கிறோம். ஒரு சுதந்திர சிந்தனையாளன் என்கிற விதத்தில் பாலியல் சுதந்திரத்துக்கு எல்லைகள் எதுவும் இருக்கக்கூடாது என்பதைக் கோட்பாட்டுரீதியாக ஏற்றுக்கொள்பவன் நான். நடைமுறையிலோ என்னுடைய கத்தோலிக்கப் பின்னணி, பூர்ஷ்வா சமூகம் ஆகியவற்றின் முன் முடிவுகளிலிருந்து என்னால் தப்பிக்க முடியாது. நம்மில் பலரையும் போலவே நானும் இரட்டை வேடத்துக்குப் பலியானவன்தான்.

**?** வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இருப்பது போன்ற ஜனநாயகம் மூன்றாம் உலக நாடுகளுக்கு சரிப்பட்டு வருமென நம்புகிறீர்களா.

அந்த நாடுகளில் இருக்கும் ஜனநாயகம் அவர்களுடைய வளர்ச்சியின் விளைவு. அதை அப்படியே வேறுபட்ட கலாசாரங்கள் கொண்ட மூன்றாம் உலக நாடுகளில் பொருத்தப் பார்ப்பது யதார்த்தமானது அல்ல. சோவியத் ரஷ்யாவின் மாதிரியை மற்ற நாடுகளில் பிரயோகிக்க நினைத்தது போலத்தான் இதுவும்.

–காப்ரியேல் கார்ஸியா மார்க்யெஸ்–
(லத்தீன் அமெரிக்க நாவலாசிரியர்.)

விபவி
81/4, பாகொடை வீதி நுகேகொடை.
தொ. பே - 812407. தொலை மடல்- 075 515982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org